பாடம் 7

# மிதக்கும் மிருகக்காட்சி சாலை

*மிருகக்காட்சி சாலைக்கு நீ சென்றிருக்கிறாயா? அந்த மிருககங்களுக்கு உணவு கொடுக்கப்படுவதைப் பார்த்திருக்கிறாயா? அல்லது, அவை தங்கியுள்ள கூண்டுகள் கழுவிச் சுத்தம் செய்யப்படுவதை பார்த்ததுண்டா? அந்த மிதக்கும் மிருகக்காட்சி சாலையின் உள்ளே நோவாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நிறைய வேலை இருந்தது.*

தேவன் சொல்லியபடியே அந்தப் பேழையைக் கட்டி முடித்தார்கள். அதற்கு 120 வருடங்கள் ஆயின. பேழையைக் கட்டி முடித்த பின்னரும் செய்யவேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. முதலாவது, ஒரு பேழையைக் கட்டும்படியாக தேவன் நோவாவிடம் சொன்னார். பேழையைக் கட்டவேண்டியதற்கான காரணத்தையும் சொன்னார். மேலும், சுத்தமான சகல மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு ஜோடிகளைச் சேர்த்துக்கொள்ளச் சொன்னார். சுத்தமல்லாதவற்றில் ஒரு ஜோடியை மாத்திரம் சேர்த்துக்கொள்ளச் சொன்னார். ஆதி7:2,3.



கடந்தவாரம் நாம் பார்த்தபடி, நோவாவின் குடும்பத்தாருக்கும் சகல மிருகங்கள் அதாவது நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊருவன என்று அனைத்து உயிரினங்களுக்கும் உரிய உணவு சேகரிக்கப்பட்டாயிற்று. யாவரும் தங்குவதற்கான வசதிகளும் செய்யப்பட்டுவிட்டன. நோவாவின் குடும்பத்தார் தங்கட்குத் தேவையான ஆடைகள், படுக்கைகள், இன்னும் தேவையான யாவற்றையும் பேழையிலே தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அறையிலே வைத்தார்கள்.

தேவன் சொல்லியபடியே அந்த அதிசயம் நடந்தது. காட்டிலிருந்து மிருகங்கள் தேவன் கட்டளை இட்டபடியே அழகாக நடந்துவந்து பேழைக்குள் சென்றன. சகல உயிரினங்களும் நடந்தும், பறந்தும், ஊர்ந்தும், துள்ளிக் குதித்தும் பேழைக்குள் சென்ற காட்சி, பார்த்து மறக்கமுடியாத

## மனன வசனம்

**விசுவாசத்திற்காகக் கூடப்போரா(டுங்கள்).**
**பிலிப்பியர் 1:27.**

ஒன்றாக இருந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது.

இதைப் பார்த்த பின்னராவது நோவா காலத்து மக்கள் மனம் மாறியிருக்க வேண்டும், தேவனின் வார்த்தையை நம்பியிருக்கவேண்டும். ஆனால், அவர்கள் மனம் மாறவில்லை.

நம் வீட்டிலே இரண்டு கோழிகளோ, ஆடுகளோ, மாடுகளோ இருந்தாலே அவைகளைக் கவனிப்பது நமக்குப் போதும் போதும் என்றாகிவிடும். ஆனால், இங்கே பெரிய மிருகங்கள் முதல் சிறிய பூச்சிகள் வரைக்கும் நோவாவின் குடும்பத்தார் கவனிக்க வேண்டியதாயிருந்தது. மிகுந்த அன்போடும் அக்கறையோடும்அந்த உயிரினங்களை அவர்கள் கவனித்தார்கள்.

உணவு, தண்ணீர் போன்றயாவையும் கொடுத்தார்கள். அவைகளும் மிகவும் திருப்தியாகச் சாப்பிட்டன. அவ்வாறு ஒவ்வொரு நாளும் மிருகங்களைக் கவனிப்பதற்கே அதிக நேரமாகியது.

ஆயினும், அந்த மிதக்கும் மிருகக்காட்சி சாலையைப் பாதுகாப்பதற்காகத் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து தேவன் தந்த வேலையைச் சந்தோஷமாகச் செய்தார்கள்.

நாமும்கூட இன்றைக்குப் பரலோக வீட்டிற்குச் செல்வதற்காகச் செய்யவேண்டிய வேலை அதிகம் உள்ளது. நம்முடைய குடும்பங்களிலும், உறவினர்களிலும், பள்ளிகளிலும், ஆலயங்களிலும் அநேகருக்குப் பல வேதனைகள் இருக்கலாம், தேவைகள் இருக்கலாம். நாம் அவர்களை அன்புடன் விசாரித்து உதவவேண்டும். தேவனின் அன்பைச் சொல்லவேண்டும். தேவனைச் சந்திப்பதற்கு அவர்களை ஆயத்தமாக்க வேண்டும்.

உடலில் பெலவீனமாக வேலைசெய்ய முடியாமல் இருப்பவர்களுக்கும், வயதானவர்



## செய்தி

**தேவனுடைய குடும்பத்தின் பிள்ளைகள் ஒன்றாக இணைந்து தேவனுக்காக வேலைசெய்கிறார்கள்.**

களுக்கும் உதவியாக இருக்க வேண்டும். ஜன்னல்களைத் துடைப்பது, வீட்டைப் பெருக்குவது, ஒட்டடை அடிப்பது, பாத்திரம் கழுவுவது போன்ற சிறுசிறு வேலைகளைச் செய்து உதவுவதின் மூலமாக அவர்களைச் சந்தோஷப்படுத்தலாம்.

எல்லா மிருகங்களிடமும் நோவாவின் குடும்பத்தினர் மிக அன்பாக நடந்துகொண்டனர்.

நாம் காட்டுகிற அன்பின் மூலம்தான் பிறரை இயேசுவிடம் கொண்டுவரமுடியும். எனவே, தேவன் நமக்குத் தந்துள்ள வேலையைச் செவ்வனே செய்வோம். யாவரும் ஒன்றாக, நன்றாகச் சேர்ந்து செய்வோம். நாம் ஒரு குழுவாகச் சேர்ந்து தேவனுக்காக வேலைசெய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

செல்லமே, உன் அன்பான செயல்கள் மூலம் பிறருக்கு நீ இயேசுவைக் காட்டுவாயா?

### செய்முறை

*தேவனுடைய வேலையை நாம் எப்படிச் செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்? விடையைக் கண்டறிய கீழேயுள்ள படங்களைப்பார். முதல் படத்தில் உள்ள மிருகத்தின் முதல் எழுத்தையும், அடுத்த படத்தில் உள்ள பிராணியின் இரண்டாவது எழுத்தையும் சேர்க்க விடையைக் கண்டுபிடிக்கலாம்.*





______ ______